செ.வெ.எண்: 42 நாள்: 16.11.2016

## பத்திரிகைச்செய்தி

## முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பு சக்கர நாற்காலிகள் வழங்குவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் அவர்களின் நலனுக்காக தமிழக அரசால் பல்வேறு நலத்திட்ட உதவிகள் செயல்படுத்தி வருகிறது. அதில் உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2015-16ம் ஆண்டில் **முதுகுதண்டுவடம், நரம்பு, உறை தேய்வு நோய் மற்றும் தண்டுவட குறைபாடு நோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.** இத்திட்டத்தின் கீழ் மேற்படி குறைபாடுடைய விபத்து மற்றும் நரம்பு தேய்மானத்தினால் முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டு **(Paraplegia)** இடுப்பு கீழ் செயல் இழந்தவர்களுக்கு பெரிய வகை சிறப்பு சக்கர நாற்காலிகளும், **(Quadriplegia)** கழுத்து பகுதி வரை பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறிய வகை சிறப்பு சக்கர நாற்காலிகளும் வழங்கப்பட உள்ளது. எனவே புதுக்கோட்டை மாவட்டத்தை சார்ந்த மேற்படி குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட உள்ளதால் இத்திட்டத்தின் கீழ் சிறப்பு சக்கர நாற்காலிகள் பெற விரும்புவோர் **மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், புதிய பேருந்து நிலையம் அருகில், புதுக்கோட்டை , (தொலைபேசி எண். 04322 223678)** அவர்களிடமிருந்து அதற்கான விண்ணப்ப படிவங்களை பெற்று **23.11.2016க்குள்** விண்ணப்பித்து பயனடையலாம்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**